**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 102 /2022 |
| Deposition of witness | | PW- 3 /LW- 3 |
| Name | | திருமதி. உஷா |
| Father's/Husband Name | | திரு. பிச்சைமணி |
| Village | | புதுக்கோட்டை, உள்ளூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 41/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 29 day of July 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**
**<u>முதல் விசாரணை</u>**

நான் புதுக்கோட்டை உள்ளூர் ஆதிதிராவிடர் தெருவில் வசித்து வருகிறேன், விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார். ஆஜர் எதிரியை தெரியும், எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் மற்றும் உறவினர். ஆஜர் எதிரி கருணாநிதி எனது ஊரை சேர்ந்த மயில் என்பவரிடம் பணத்தை கடனாக பெற்று தராமல் ஓடி ஒளிந்துவிட்டார். இதனால் மயில் என்பவர் கருணாவை கண்டுபிடித்து திட்டிவிட்டு சென்றுவிட்டார். மறுநாள் இது சம்மந்தமாக கடந்த 30.07.2018 ந் தேதி இரவு 11.00 மணியளவில் ஆஜர் எதிரி கருணாநிதி கட்டையை கொண்டு வந்து எங்கள் வீட்டு வாசலில் உட்காந்திருந்த என் மாமியாரை பார்த்து தேவடியா, கண்டாரஒளி என அசிங்கமாக திட்டி மயிலிடம் நீதான் காட்டிக்கொடுத்து விட்டாய் என்று சொல்லி கட்டையால் என் அம்மாவின் இடது பக்க கையில் அடித்துவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி சென்றுவிட்டார். பின்பு என்

மாமியாரை அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமகனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். மேல் சிகிச்சைக்காக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். இது சம்மந்தமாக என் மாமியாரை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அதிராம்பட்டிணம் போலிசாரிடம் என் மாமியார் புகார் வாக்குமூலம் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை